செ.வெ.எண் -14 நாள்: 09.07.2018

# அரியலூர் மாவட்டத்தில் தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் பயிற்சி குறித்து விழிப்புணர்வு பேரணி.

அரியலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாக 2018 ஜுலை 2வது வாரத்தில் 09.07.2018 முதல் 13.07.2018 வரை சிறப்பாக அனுசரிப்பதைத் தொடர்ந்து திறன் வாரத்தின் முதல் நாள் நிகழ்வான திறன் விழிப்புணர்வு பேரணியை அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் இன்று (09.07.2018) கொடியசைத்து துவக்கிவைத்தார்.

இப்பேரணியில் 350க்கும் மேற்பட்ட அரியலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துவங்கி அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வழியாக அரியலூர் பேருந்து நிலைய அண்ணா சிலை வரை சென்று முடிவுற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு.மூ.வினோத்குமார் மற்றும் அலுவலக பணியாளர்கள், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் அவர்கள் திருமதி.கே.எஸ்.கற்பகம் மற்றும் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி அலுவலர், திரு.முத்துக்குமரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**